**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 15.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 17911/SCIC/2023

திரு.விஸ்வன்.K — மேல்முறையீட்டாளர்
க.எண்.4/204, மேல்கவ்வட்டி
முத்தொரை அஞ்சல்
உதகமண்டலம், நீலகிரி

/எதிர்/

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
நீலகிரி மாவட்டம்,

…. பொது அதிகார அமைப்பு

2. பொதுத் தகவல் அலுவலர்/
2 எண்.இணை சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
உதகமண்டலம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 10/04/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ எண்.2 சப்ரிஜிஸ்திரார் அலுவலகம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "தங்களுடைய அலுவலகத்தில் பதிவு ஆவண எண்.1052/1973 தேதி 16/10/1973 ஆனது 17/10/1973 அன்று பதிவு செய்யப்பட்டதை அறிய வருகிறேன். இதில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்.190/3 என்பது தவறாக காணப்படுகிறது. எந்த முன் ஆவண அடிப்படையில் இந்த சர்வே எண்.முறைப்படி கையாளப்பட்டது என்பதனைத் தெரிவிக்கவும். புதிய சர்வே எண். குறிப்போ (அ) பட்டா எண். குறிப்போ ஆவணத்தில்

காணப்படவில்லை ” என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ 2 எண். இணை சார்பதிவாளர், 2 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.62/2023, நாள் 08/05/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 17/05/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதற்கு மேல்முறையீட்டு அலுவலர்/மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), நீலகிரி மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1030/ஆ1/2023, நாள் 19/06/2023 வாயிலாக இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 09/10/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 17911/SCIC/2023 ஆக பதிவு செய்தது. மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), நீலகிரி மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1030/ஆ1/2023, நாள் 25/09/2024 மற்றும் 12/11/2024 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். பின்னர், மனுதாரர் 18/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும் மனுதாரர் 05/04/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீது தொலைபேசி (அ) காணொளி காட்சி வாயிலான விசாரணை நடத்த வேண்டுமென்று கோரியுள்ளார். எனவே, மனுதாரருடன் தொலைபேசி வாயிலாக விசாரணை நடத்தப் பெற்றது. பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.ரா.ரமேஷ், சார்பதிவாளர் (பொ), உதகமண்டலம் சார்பதிவகம், நீலகிரி மாவட்டம் அவர்கள் ஆஜராகி ஏற்கெனவே மனுதாரருக்கு 08/05/2023, 19/06/2023, 25/09/2024 மற்றும் 12/11/2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 18/11/2024 தேதியிட்டு, தனது ஆட்சேபணை மனுவை அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், மனுதாரரின் 10/04/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் பெரும்பாலான இனங்களுக்கு விளக்கங்களையும், கருத்துரைகளையும் கோரியுள்ளார், அதனை பொதுத் தகவல் அலுவலரால் வழங்க இயலாது என்றார். மேலும் பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், மனுதாரர் பிரிவு 77A-ன் கீழ் ஆவணத்தை இரத்து செய்ய விண்ணப்பித்துள்ளதாகவும், அதுகுறித்த விசாரணை நிலுவையில் இருந்த நிலையில், உயர்நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட பிரிவு 77A-ஐ இரத்து செய்து, ஆணை பிறப்பித்ததால் மேல் நடவடிக்கையினை தொடர முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.**

6. **மனுதாரரிடம் ஆணையம் தொலைபேசி வாயிலாக விசாரணை செய்த போது, மனுதாரர் தனக்கு பிரதானமாக இனம்-1-க்கு சரியான தகவலை வழங்கிவிட்டால் போதுமானது, என்று தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலை பரிசீலனை செய்கையில், இனம்-1-க்கு சரியான தகவலை வழங்கவில்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, மனுதாரரின் புகார் சரியானது என ஆணையம் ஏற்கிறது.**

7. **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், நீலகிரி மாவட்டம் அவர்கள், பதிவேடுகளை / ஆவணங்களைத் தேடிப்பார்த்த பின்னர் இனம்-1-க்கு திருத்திய/ சரியான தகவலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்ப வேண்டுமென்றும், அவ்வாறு தேடிப்பார்த்தும் கிடைக்கப் பெறவில்லை எனில் அதுதொடர்பாக இனம்-1-க்கு பிரமாண வாக்குமூலத்தை (Sworn Affidavit) மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்ப வேண்டுமென்றும், அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பிய தகவலின் நகல் (அ) பிரமாண வாக்குமூல நகல், அதனை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை 15/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./- (முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17911/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
நீலகிரி மாவட்டம்,

2. பொதுத் தகவல் அலுவலர்/
2 எண்.இணை சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
உதகமண்டலம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.விஸ்வன்.K
க.எண்.4/204, மேல்கவ்வட்டி
முத்தொரை அஞ்சல்
உதகமண்டலம், நீலகிரி

RG/PC